மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு ஜுலை திங்கள் 08ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.05/2021
உள்
அசல் வழக்கு எண்.28/2018

-------------

பி.நாராயணசாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பி.ராமசாமி செட்டியார்
2. பி.சின்னத்தாய் (எ) சுப்புலட்சுமி
3. பி.ரவிப்பாண்டியன்
4. பி.சீனிவாசன்
5. பி.கண்ணன்
6. எல்.சுப்பம்மாள்
7. எல்.சீனிவாசன்
8. எல்.ஜெயலட்சுமி
9. சீனியம்மாள்
10. கிருஷ்ணவேணி
11. ராஜலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 27.09.2021ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 30.06.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரரே ஆஜராகியும், 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.முத்துக்கண்ணு அவர்கள் ஆஜராகியும், 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆட்சேபணை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், அசல் வழக்கு அ.வ.எண்.28/2018 பிராது பாரா 22ல் பதிவு செய்துள்ள சர்வே எண்.247/4ஏ மற்றும் தபசில் சொத்து விபரம் 1வது அயிட்டம் சொத்து பாராவில் பதிவு செய்துள்ள சர்வே எண்.247/4ஏ ஆகியவைகளுக்கு பதிலாக சர்வே எண்.247/4பி என பதிவு செய்து கொள்ள அனுமதித்து வழக்கினை மேல்நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி 27.09.2021ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

சர்வே எண்.247/4ஏ சொத்து வாதி நாராயணசாமிக்கு பர்ததியப்பட்டது என சாத்தூர் வட்டாட்சியர் அவர்கள் 06.06.2015ம் தேதியில் உத்தரவு வழங்கியுள்ளார்.மேற்படி 06.06.2015 தேதிய உத்தரவு இவ்வழக்கில் ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அசல் வழக்கு தாக்கலின் போது மேற்படி பிராது பாரா 22ல் சர்வே எண்.247ஏ/4ஏ சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி வட்டர்டசியர் அவர்களது 06.06.2015ம் தேதிய உத்தரவில் ஏற்பட்டிருந்த சர்வே நிர் 247/4ஏ என்ற சொத்து நாராயணசாமிக்கு பாத்தியப்பட்டது என்ற பிழை திருத்தம் செய்து சர்வே நிர் 247/4பி என்ற சொத்து நாராயணசாமிக்கு பாத்தியப்பட்டது என்று வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் 01.11.2019ம் தேதிய மூ.மு.அ3/1611/2019 எண்ணிட்ட ஆணைகள் மூலம் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பிழை வாதி அலுவலகத்தால் ஏற்பட்ட பிழையாகும். மேற்படி பிழை வடட அலுவலகத்தில் ஏற்பட்டிருந்ததை 01.11.2019 தேதிய கோட்டாட்சியர் உத்தரவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி பிராது பாரா 22ல் சர்வே எண்.247/4ஏ என்று பதிவு செய்யப்பட்டுள்ளதற்கு பதிலாக சர்வே நிர் 247/4பி என பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமும் நியாமுமாகும்.

மேலும் இதனை தொடர்ந்து தபசில் சொத்து விபரம் 1வது அயிட்டம் சொத்து பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே நிர் 247/4ஏ என்பதற்கு பதிலாக

247/4பி என பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமும், நியாயமுமாகும். எனவே, அசல் வழக்கு எண்.28/2018 தாக்கல் செய்யும்போது பிராது பாரா 22ல் பதியப்பட்டுள்ள சர்வே நிர் 247/4ஏ மற்றும் தபசில் சொத்து விபரம் 1வது அயிட்டம் சொத்து பாராவில் பதியப்பட்டுள்ள சர்வே நிர் 247/4ஏ ஆகியவற்றிற்கு பதிலாக சர்வே நிர் 247/4பி பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றன. மேற்படி சர்வே நிர் 247/4பி என பதிவு செய்து கொள்ளாதபட்சத்தில் வாதிக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே மனுவை அனுமதித்தும் அ.வ.எண்.28/2018 பிராது பாரா 22ல் பதிவு செய்துள்ள சர்வே நிர் 247/4ஏ மற்றும் தபசில் சொத்து விபரம் 1வது அயிட்டம் சொத்து பாராவில் பதிவு செய்துள்ள சர்வே நிர் 247/4ஏ ஆகியவைகளுக்கு பதிலாக சர்வே நிர் 247/4பி என பதிவு செய்து கொள்ள அனுமதித்தும் வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 27.09.2021ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1, 3, 4, 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரை சுருக்கம்:-**

தபசில் சொத்துக்கள் அனைத்தும் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு சமபாகம் கிடைக்கக்கூடியதாக உள்ளது. அசல் வழக்கில் வாதி நாராயணசாமி என்பவர் இந்து பொது பிரிவினை ஆகாத கூட்டுக்குடும்ப சொத்துக்களை யுடிஆர் நில சர்வேக்கு பின்பு தன் பெயருக்கு தவறான தகவலின் அடிப்படையில் பட்டா மாற்றம் பெற்றுள்ளார். தபசில் சொத்துக்கள் ஒருபோதும் மனுதாரர்/ வாதியின் அனுபவத்தில் இருந்ததில்லை. மேற்கண்ட சொத்துக்களை ஒருபோதும் அனுபவித்தது கிடையாது. இடைக்கால மனுவல் 1வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்தான புல எண்.247/4பி சொத்திற்கு பதிலாக சர்வே எண்.247/4பி ஆக சீர்திருத்தம் செய்ய தாக்கல் செய்துள்ள மனுவில் மாற்றம் செய்தால் வழக்கின் தன்மை முழுவதும் பாதிப்பதாக அமைந்துவிடும். மனு பாரா3-ல் சொல்லியுள்ளவை அனைத்தும் அசல் வழக்கிற்கு முன்னுக்கு பின்னாக கூறப்பட்டுள்ளது. அசல் வழக்கானது நீதிமன்றத்தில் 15.03.2018ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில்

25.04.2018ம் தேதி ஆஜரான நிலையில் தற்போது 01.11.2019ம் தேதி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ஆவண எண் மூ.மு-அ.3/167/2019 என்ற எண்ணில் மேற்கண்ட புல எண்ணில் உள்ள சொத்து நாராயணசாமிக்கு பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளதாகவும், அதை அசல் வழக்கில் சேர்த்துள்ளதாகவும் அதை அசல் வழக்கில் சேர்த்து சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று இடைக்கால மனுவில் கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. சீர்திருத்தம் செய்ய கேட்டிருக்கும் மனு அனுமதிக்கப்பட்டால் வழக்கின் தன்மைகள் மிகவும் பாதிப்பதாக அமைந்துவிடும். எனவே, மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனுவை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும் இல்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதார்கள் எந்த ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>8). தீர்வு:-</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் செயல்முறை ஆணையில் "சாத்தூர் வட்டம் குண்டலகுத்தூர் கிராமம் 247/4ஏ பெருமாள்சாமி செட்டியார் மகன் நாராயணசாமி (ப.எண்.993 பரப்பு 0.94.75) என்பவர் பெயரிலும் 247/4பி பெருமாள் செட்டியார் (ப.எண்.994

பரப்பு 0.94.75) என்பவர் பெயரிலும் தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை பூமியில் உள்ளவாறு புல எண்.247/4ஏ-ஐ பெருமாள் செட்டியார் என்பவருக்கும் புல எண்.247/4பி-ஐ பெருமாள் செட்டியார் மகன் நாராயணசாமி என்பவர் பெயருக்கும் மாற்றம் செய்ய இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது" என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே இத்தகைய சூழ்நிலையில் மனுதாரரால் அசல் வழக்கு அ.வ.எண்.28/2018 பிராது பாரா 22ல் பதிவு செய்துள்ள சர்வே எண்.247/4ஏ மற்றும் தபசில் சொத்து விபரம் 1வது அயிட்டம் சொத்து பாராவில் பதிவு செய்துள்ள சர்வே எண்.247/4ஏ ஆகியவைகளுக்கு பதிலாக சர்வே எண்.247/4பி என பதிவு செய்து கொள்ள அனுமதித்து வழக்கினை மேல்நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி 27.09.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டத்திற்கும் ஆளாகக் கூடும். எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் மனுதாரின் எழுத்துமூலமான வாதுரை நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு அசல் வழக்கு அ.வ.எண்.28/2018 பிராது பாரா 22ல் பதிவு செய்துள்ள சர்வே எண்.247/4ஏ மற்றும் தபசில் சொத்து விபரம் 1வது அயிட்டம் சொத்து பாராவில் பதிவு செய்துள்ள சர்வே எண்.247/4ஏ ஆகியவைகளுக்கு பதிலாக சர்வே எண்.247/4பி என பதிவு செய்து கொள்ள அனுமதித்து வழக்கினை மேல்நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி 27.09.2021ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜூலை திங்கள் 08ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/வாதி தரப்பு சாட்சிகள்:- இல்லை

மனுதார்/வாதி தரப்பு சான்றாவணங்கள்:-

ம.சா.ஆ.1 - பெருமாள் செட்டியார், நாராயணசாமி பெயரில் ஏற்பட்டுள்ள கூட்டுப்பட்டா எண்.664 அசல்

ம.சா.ஆ.2 - 01.11.2019 சாத்தூர் வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறை ஆணைகள் அசல்

ம.சா.ஆ.3 - பெருமாள் செட்டியார் மகன் நாராயணசாமி செட்டியார் பெயரில் உள்ள பட்டா எண்.993

எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.